## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

## அ.வ.எண்.303/2017

2019 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.த.சா.1-ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு.க.சுரேஷ் குமார் உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | கனகாம்பரம் | தொழில் | - | |
| த.க.பெ. | - | சுப்பிரமணியம் | ஊர் | - | |
| வயது | - | | தாலுக்கா | - | |
| மதம் | - | | மாவட்டம் | - | |

10.12.2019

**முதல் விசாரணை.**

நான் வழக்கில் மூன்றாம் பிரதிவாதி சரஸ்வதியின் பாதுகாவலர். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

3 ம் பிரதிவாதி சரஸ்வதி தற்காலம் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்து வருவதாகச் சொன்னால் சரிதான். நான் சரஸ்வதிக்கு அண்ணி உறவு. என்னைத் தவிர வேறு உறவு யாரும் இல்லை. சரஸ்வதியை நான் தான் பராமரித்து வருகிறேன். பழனிச்சாமியின் மனைவி தான் சரஸ்வதி. பழனிச்சாமி, சரஸ்வதி தம்பதியினருக்கு குழந்தைகள் இல்லை. பழனிச்சாமி மது அருந்தும் பழக்கம் உள்ளவராக இருந்தார் என்றால் சரிதான். பழனிச்சாமிக்கும் இரண்டாவது மனைவியான நல்லமுத்துவுக்கும் பிறந்தவர் தான் வாதி சுவாமிநாதன் என்றால் சரிதான். 4 ம் பிரதிவாதியான வரதராஜ் ஒரு ரங்கசாமி நாயக்கர் மற்றும் விஜயா ஆகியோரின் மகன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.